සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / ***All rights Reserved***

මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය

**மத்துகம கல்வி வலயம்**

# இரண்டாம் தவணை பரீட்சை – 2023

| தரம் :- 06 | பாடம் :- வரலாறு | வினாப்பத்திரம் I , II | நேரம் :- 02 மணித்தியாலங்கள் |
|---|---|---|---|

பெயர் :...............................................................................................

**அறிவுறுத்தல்கள்**

- **1 – 20 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1. மனிதனால் முதன் முதலில் நெருப்பு கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?
   1. ஈரான் 2. இஸ்ரேல் 3. சீனா 4. அரேபியா

2. கி.பி 4 ஆம் நூற்றாண்டில் மகாநாம தேரரால் எழுதப்பட்ட நூல்?
   1. மகா வம்சம் 2. தீப வம்சம் 3. சோழ வம்சம் 4. போதி வம்சம்

3. வட்டத்தில் 360 பாகை உள்ளது என கூறிய நாகரிகம் எது?
   1. மொசபதேமியா நாகரிகம் 2. சிந்து வெளி நாகரீகம்
   3. எகிப்திய நாகரிகம் 4. சீனா நாகரிகம்

4. வரலாற்று மூலாதாரங்களில் இரண்டில் ஒன்று இலக்கிய மூலாதாரமாகும். மற்றைய மூலாதார வகை எது?
   1. வெளிநாட்டு மூலாதாரம் 2. தொல்பொருள் மூலாதாரம்
   3. வம்சக் கதைகள் 4. சிற்பங்கள்

5. வானர நிலையிலிருந்து மனிதனது நிலையை அடைந்த மனிதன் எவ்வாறு அழைக்கப்பட்டான்?
   1. ஹோமோ சேபியின் 2. ஹோமோ இரெக்டஸ்
   3. ஒஸ்ரலோபிதிகஸ் 4. ஹோமோ நியாண்டதாலன்சிஸ்

6. நாம் உணவுக்காக பெற்றுக் கொள்ளும் நெல்லை முதன் முதலில் உற்பத்தி செய்த நாடு?
   1. மத்திய தரைக் கடல் 2. சீனா 3. மத்திய மெக்சிகோ 4. கனடா

7. கிமு 3000 ஆண்டளவில் மண்ணால் செய்யப்பட்ட அறிவால் பயன்படுத்தியதாக கண்டறியப்பட்ட யுகம் எது?
   1. பண்டைய காலம் 2. நவீன காலம் 3. மத்திய காலம் 4. நிகழ் காலம்

8. நாகரிகம் தோன்றுவதற்கு முன்பாக சமூகத்தில் ஏழை பணக்கார பிரிவு தோன்ற காரணமாக அமைந்த விடயம்.
   1. கல்வியால் ஏற்பட்ட மாற்றம் 2. கட்டட நிர்மானிப்பால் ஏற்பட்ட மாற்றம்
   3. பின்பற்றப்பட்ட கலாசார மாற்றம் 4. அறுவடையில் ஏற்பட்ட மாற்றம்

9. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு இடம் பெறுவதற்கு முன்னைய காலம் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டது?
   1. கி.மு 2. கி.பி 3. புத்த வருடம் 4. சாலிவாகன சகாப்தம்

10. மொசபத்தேமிய நாகரிகம் அமைவு பெற்றுள்ள நதிகளாவன
    1. இந்து, கங்கை 2. லீனா, யான்சி
    3. யூப்ரட்டிஸ், தைகிரிஸ் 4. நைல் நதி, கிருஷ்ணா நதி

11. விஜயன் உள்ளிட்ட குழுவினர் இலங்கையில் தரையிறங்கிய இடம் எது?
    1. மாந்தோட்டம் 2. தம்பபன்னி 3. திருகோணமலை 4. கொடவாய

12. கீழுள்ள A,B,C ஆகிய பகுதிகளை இணைப்பதன் மூலம் பெறப்படும் விடை தொகுதி

| | |
|---|---|
| 1. விளையாட்டு மண் வண்டி | A. எகிப்து |
| 2. பிரமிட் | B. மொசபதேமியா |
| 3. குறியீட்டு எழுத்து | C. சிந்து நதி |

    1. A,B,C 2. B,C,A 3. C,A,B 4. A,C,B

13. மம்மி முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள?
    1. எகிப்தியர்களால் 2. மொசப்பதேமியர்களால்
    3. சிந்து நதி நாகரிகத்தவர்களால் 4. உரோமானியர்களால்

14. பின்வருவனவற்றுள் கற்கால மனிதனால் செய்ய முடியாத செயற்பாடாக அமைவது.
    1. விலங்குகளை வேட்டையாடல் 2. கல்லாயுத பயன்பாடு
    3. மரண சடங்கு முறையை பின்பற்றியமை 4. விவசாயம் செய்து உணவை பெற்றுக் கொண்டமை

15. சிந்து நதி நாகரிகத்திற்கு உட்படும் நகரங்களில் ஒன்று அல்லாதது
    1. கீதா 2. மொகஞ்சதாரோ 3. ஹரப்பா 4. டொலவீர

16. **திககாமினி உன்மாதச் சித்ரா தாய் தந்தையர் ஆவர்.**
    **பண்டுல பிராமனிடம் கல்வியை கற்றான்**
    **முதன்முறையாக அனுராதபுரத்தை தலைநகராக கொண்டு ஆட்சி செய்தான்.**

    மேற்கூறப்பட்டு கூற்றுக்களோடு தொடர்புடைய அரசன் யார்?
    1. தேவநம்பியதிஸ்ஸ 2. பண்டுகாபயன் 3. துட்டகைமுனு 4. வலகம்பாகு

17. மொசப்பத்தேமிய நாகரிகத்தில் பூமிக்கு அதிபதியாக வணங்கப்பட்ட கடவுளின் பெயர் யாது?
    1. அனு 2. என்கிகி 3. என்லிலி 4. சிகுறாத்

18. கீழுள்ள A,B,C பகுதியை தொடர்பு படுத்தினால் பெறப்படும் விடைத் தொகுதி

| | |
|---|---|
| 1. கெயரோ நகரம் | A.நெபடிட்டி |
| 2. எகிப்து | B.கீசா |
| 3. பேரழகி | C.பிரமிட் |

    1. ACB 2. BAC 3. BCA 4. CAB

19. விஜயன் உள்ளிட்ட குழுவினர் இந்நாட்டில் குடியேற்றங்களை உருவாக்கிய நதி பள்ளத்தாக்கு எது?
    1. மல்வத்து ஓயா 2. மகாவலி 3. களுகங்கை 4. களனி கங்கை

20. பின்வருவனவற்றுள் சிந்து நதி நாகரிகம் நிலவிய நதி எது?
    1. நைல் நதி 2. இந்து நதி 3. குவாங்கோ நதி 4. லீனா நதி

**( 2 x 20 = 40 புள்ளிகள் )**

பகுதி 11

**முதலாம் வினா கட்டாயமானது**
**ஏனைய வினாக்களிலிருந்து நான்கு வினாக்களை தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**01).** A , B என தரப்பட்டுள்ள படங்களின் வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடைகளை எழுதுக.

A



A
1. படத்தில் காணப்படும் நபரின் பெயர் யாது?
   ...................................................................
2. அவர் எந்த அரசனின் மனைவி?
   ...................................................................
3. அவரால் ஆட்சி செய்யப்பட்ட நாடு எது?
   ...................................................................
4. இவள் எந்த அரச பரம்பரையை சேர்ந்தவள்?
   ..............................................................................

**( 2 x 4 = 08 புள்ளிகள் )**



B
1. படத்தில் உள்ள உறவின் பெயர் யாது?
   ..................................................................
2. இது எந்த யுகத்திற்கு உரியது?
   ..................................................................
3. இது எதனால் உருவாக்கப்பட்டது?
   ............................................................
4. இது எதற்காக பயன்படுத்தப்பட்டது?
   ..............................................................

**( 2 x 4 = 08 புள்ளிகள் )**

**02)**
1. உமது பாடசாலையின் வரலாற்றை அறிய உதவும் இலக்கிய மூலாதாரங்கள் **இரண்டை** குறிப்பிடுக?
2. வரலாற்றை கற்பதற்கு உதவக் கூடிய தொல்பொருள் மூலாதாரங்கள் **நான்கினை** குறிப்பிடுக?
3. வரலாற்றை கற்பதனால் கிடைக்கும் **நன்மைகளை** சுருக்கமாக விளக்குக?

**( 2 + 4 + 5 = 11 புள்ளிகள் )**

**03)**
1. பெரும் பணியுகத்தில் மனிதன் எதிர்கொண்ட சவால்கள் **இரண்டை** குறிப்பிடுக?
2. ஹோமோ நியண்ட தாளம்சிஸ் மனிதனின் திறமைகள் **இரண்டை** குறிப்பிடுக?
3. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனின் வாழ்க்கை முறை பற்றி குறிப்பிடுக?

**( 2 + 4 + 5 = 11 புள்ளிகள் )**

04) 1. விவசாய யுகத்தில் மனிதன் பயிரிட்ட பயிர்கள் **இரண்டை** குறிப்பிடுக?

2. சீன நாகரிகத்தவர்களால் உலகுக்கு கிடைக்கப்பெற்ற கொடைகள் **இரண்டை** குறிப்பிடுக?

3. மனிதன் விவசாயத்தில் ஈடுபட்டமையால் ஏற்பட்ட விளைவுகள் தொடர்பாக சுருக்கமாக விளக்குக?

**( 2 + 4 + 5 = 11 புள்ளிகள் )**

05) 1. பண்டுகாபயனால் கட்டப்பட்ட முதலாவது குளம் எது?

2. அசோக சக்கரவர்த்திக்கும் தேவ நம்பிக்கை ஏற்பட்ட நட்புறவின் காரணமாக இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற நன்மைகளை சுருக்கமாக விளக்குக?

3. தேவநம்பியதீசனால் அமைக்கப்பட்ட சமய கட்டடங்கள் **நான்கை** குறிப்பிடுக?

**( 2 + 4 + 5 = 11 புள்ளிகள் )**

06) 1. மொசப்பத்தேமியா என்பதன் பொருள் யாது?

2. மொசப்பத்தேமிய சமூக பிரிவுகளை குறிப்பிடுக?

3. எகிப்திய நாகரிகத்தின் ஊடாக உலகுக்கு கிடைக்கப்பெற்ற கொடைகள் பற்றி சுருக்கமாக விளக்குக?

**( 2 + 4 + 5 = 11 புள்ளிகள் )**

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න






| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**